கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.446/2010** தேதி: **18.02.2026**

வாதி தரப்பு சாட்சி -2 (ஆசைதம்பி, த/பெ.சிவலிங்கம்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

(1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் PUC மற்றும் ITI படித்துள்ளேன். நான் வெளிநாட்டில் வேலை செய்தேனா என்றால் 30 வயதில் வெளிநாட்டிற்கு சென்றேன். எத்தனை ஆண்டுகளாக அங்கு இருந்தேன் என்றால் 28 ஆண்டுகளாக அங்கு இருந்தேன். வெளிநாட்டில் இருந்து திரும்பி வந்த பிறகு பன்ருட்டியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான்.

(2) ஆகவே தாவா சொத்தினை பற்றிய விவரங்கள் ஏதும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. சொத்து விவரங்கள் நன்றாகவே தெரியும். இவ்வழக்கில் எனது தகப்பனார் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்து பற்றி அனைத்து விவரங்களும் எனது அப்பாவிற்கு தான் தெரியும் என்றால் அவரை விட எனக்கு நன்கு தெரியும்.

(3) இவ்வழக்கினை தாக்கல் செய்து வழக்கு விவரங்கள் அனைத்தும் கூறியது நான் தான் என்றால் வழக்கு தாக்கல் செய்தது எனது அப்பா, ஆனால் விவரங்கள் நான்தான் சொன்னேன். வழக்கு சொத்தின் சக்குபந்தி என்ன என்றால் கிழக்கில் முருகையன் இடம், மேற்கில் பாக்கியம் இடம், வடக்கில் முன்பு வைத்தியலிங்கம் செட்டியார் தற்போது ஆதீலட்சுமி இடம், தெற்கு மடத்துவீதி உள்ளது.

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.18 18:11:13 +0530

(4) எனது வீட்டிற்கு தென்புறம் தான் பாக்கியம் அம்மாள் வீடு உள்ளது என்றால் எனது இடத்தில் கட்டியுள்ளார். பாக்கியம் அம்மாள் அவரது மாமனார் காலத்தில் இருந்து தற்போது உள்ள இடத்தில் தான் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் எனது இடத்தினை தற்போது வீடு விரிவாக்காம் செய்யும் போது தான் ஆக்கிரமித்துள்ளார்.

(5) பாக்கியம் அம்மாள் ஏற்கனவே அவரது மாமனார் காலத்தில் குடியிருந்த வீடு கிழக்கு மேற்கு மற்றும் தெற்கு வடக்கு அளவீடுகள் என்ன என்றால் எனக்கு தெரியாது. அவரது மாமனார் காலத்தில் இருந்து குடியிருந்த இடமானது மடத்து தெருவிற்கு வடக்கால் மற்றும் முத்தையமுதலியார் தெருவிற்கு கீழ்புறம் என்றால் சரிதான்.

(6) மடத்திற்கு தெரு என்பது கிழக்கு மேற்கு தெரு என்றால் சரிதான். முத்தைய முதலியார் தெரு என்பது தெற்கு வடக்கு தெரு என்றால் சரிதான். ஏற்கனவே எனது தகப்பனார் சாட்சி கூறிய வாக்குமூலத்தினை நான் படித்துப்பார்த்தேனா என்றால் இல்லை. நான் வழக்கு தாக்கல் செய்துள்ள இடம் எனக்கு எப்படி பாத்தியம் என்றால் 1945 ல் பொற்கிளை மற்றும் பாவாடை என்பவரிடம் இருந்து எனது தாத்தா கிரையம் பெற்ற சொத்து ஆகும். மீதி 16 1/2 அடி ஆனது பொன்னுக்கன்னுவிடம் இருந்து 1954 ல் எனது தாத்தா கிரையம் பெற்றார்.

(7) இரு கிரைய பத்திரங்களையும் சேர்த்து கிழக்கு மேற்கில் 41 அடி மற்றும் தெற்கு வடக்கில் பொற்கிளை கொடுத்தது 44 அடி மற்றும் பொன்னுகன்னு கொடுத்தது 48 அடி ஆகும். தெற்கு வடக்கில் எனக்கு மொத்தம் எத்தனை அடி பாத்தியம் என்றால் அது செவ்வகவடிவில் இல்லாததால் இதற்கு சரியான

PHEBE B

Digitally signed by PHEBE B
Date: 2026.02.18 18:11:19 +0530

அளவு இல்லை. நான் ஏற்கனே கூறும் போது மடத்து தெருவிற்கு வடபுறமும் முத்தயை முதலியார் தெருவிற்கு கீழ்புறமும் பாக்கியம் அம்மாள்குடியிருப்பதாக கூறியிருக்க எனது பத்திரத்தில் மடத்து தெருவிற்கு வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ள சக்குபந்தி தவறு என்றால் சரியல்ல. சரியாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. பாக்கியம் அம்மாள் வீட்டிற்கு வடபுறம் எனது வீடு உள்ளது என்றால் சரிதான். வடபுறமும் கிழக்கிலும் எனது வீடு உள்ளது.

(8) எனக்கு வழக்கு சொத்தில் எத்தனை வீடு உள்ளது என்றால் ஒரு வீடு உள்ளது. வா.த.சா.ஆ. 1 ஆன 23.06.1945 தேதியிட்ட கிரையத்தின் படி தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அப்படி இருக்க 1954 கிரையபத்திரம் இவ்வழக்கிற்கு சம்மந்தப்பட்டது அல்ல என்றால் சரிதான். எனது தகப்பனார் இவ்வழக்கை ஏற்கனவே நடத்தி முடித்து வாதுரைக்கு வைத்து இருந்த சமயத்தில் இந்த சொத்து விவரங்கள் அனைத்து தவறாக உள்ளது என்றும் இந்த வழக்கை ரத்து செய்துவிட்டு புதியதாக ஒரு வழக்கை தாக்கல் செய்ய இடைகால மனு எண் 535/2016 ஐ என்ற மனுவினை தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது.

(9) அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவின் பெயரில் உயர் நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்ய போவதாக கோரி வழக்கை நிறுத்தி வைக்க ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. இடைகால மனு எண் 535/2016 மீது தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.18 18:11:22 +0530

(10) 23.06.1945 தேதியிட்ட கிரையப்பத்தில் என்ன சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த கிரையப்த்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண்ணை நான்பிராதில் நான் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பட்டா எண் 5 மற்றும் 6 குறிப்பிட்டுள்ளேன்.

(11) நான் திருத்தம் செய்ததாக கூறப்படும் சர்வே எண்கள் சரியானதா என்றால் சரியானது தான். நான் எனது பிராதில் பாக்கியத்தின் சொத்திற்கு கிழக்கு என்று குறிப்பிட்டுள்ளது சரியானதான என்றால் சரிதான். பிரதிவாதியின் மூதாதயர் காலத்தில் இருந்து பிரதிவாதிகள் குடியிருந்து வந்தது கூரை வீடு என்றால் சரிதான். அந்த கூரை வீட்டை இடித்து விட்டு தான் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட இலவச வீட்டை பாக்கியம் கட்டினார்கள் என்றால் சரிதான். ஆனால் பழைய அளவில் கட்டவில்லை.

(12) பழைய அளவு என்ன என்றால் எனக்கு தெரியாது. நான் எப்போது பிறந்தேன் என்றால் 1958 ல் பிறந்தேன். நான் எனது வாக்குமூலத்தில் பாவாடை மற்றும் பொற்கிளை ஆகியோர் தண்டபானியின் தந்தை வீரப்பனின் உடன்பிறந்த சகோதர சகோதரி என்று கூறியுள்ளேன் என்றாலும் அதனை எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் எனக்கு எனது அப்பா மற்றும் தாத்தா சொல்லி தெரியும்.

(13) வீரப்பன் எப்போது இறந்தார் என்றால் 1980 ல் இறந்தார். வழக்கு சொத்து சம்மந்தமாக ஏற்கனவே வழக்கு நடைபெற்றதாக கூறும் பட்சத்தில் அதன் சர்வே எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் உள்ள

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.18 18:11:26 +0530

சர்வேஎண்  தான் இந்த வழக்கிலும் சர்வே எண் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்து விசாரணை முடிந்த பிறகு சர்வே எண் தவறு என்று தான் வழக்கை திரும்ப பெற மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

(14) எனக்கு  இந்த வழக்கில் 2019 க்கு முன்பு நடந்த சங்கதிகள் ஏதும் தெரியாது என்றால் சரிதான்.  பிரதிவாதி வீட்டிற்கு கீழ்புறம்  உள்ள சொத்தில் எந்த பிரச்சனையும் இல்லை என்றால்  சரிதான்.  ஏற்கனவே உள்ள வழக்கிலும் இந்த வழக்கிலும் வழக்கு சொத்தானது எனக்கு பாத்தியமான என்று பரிகாரம் கோரவில்லை என்றால்  சரிதான்.

(15) ஆகவே வழக்கு சொத்து எனக்கு பாத்தியம் என்று கோராமல் சொத்ததை மீட்டுதர கோருவது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி அவருக்கு பாத்தியமான சொத்தில் தான் குடியிருந்து வீடு கட்டியுள்ளார் என்றாலும் அதில் எனக்கு எந்த வித பாத்தியமும் இல்லை என்றாலும் சரியல்ல.

(16) பிரதிவாதி வீடு கட்டி முடித்த பிறகு தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால்  இல்லை. அதற்கு முன்பு  நான் தான் புகார் அளித்தோம்.  நான் சற்று முன்பு கேட்ட போது 2019 ல் இருந்து தான் வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும் என்று கூறிவிட்டு தற்போது மாற்றி கூறுகிறேன் என்றால்  எனது அப்பா எனக்கு தொலைபேசியில் சங்கதிகளை கூறியபோது நான் புகார் அளித்தேன்.

(17) பிரதிவாதி என்ன என்ன ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல்

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.18 18:11:30 +0530

செய்துள்ளார் என்று நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி 2 கிரைய பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அதன் படி பார்க்கும்போது நான் தான் அவரது இடத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் 1945 லேயே கிரையம் பெற்றுள்ளேன்.

(18) என்னுடைய பத்திரமான வா.த.சா.ஆ.1 ன் படி எந்த காலத்திலும் நான் வழக்கு சொத்தினை அனுபவிக்கவில்லை என்றாலும் அந்த பத்திரம் பொய்யானது என்றாலும் சரியல்ல.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது .

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.18 18:11:35 +0530

***Additional District Munsif ,***
***Cuddalore.***